விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 29 சனிக்கிழமை (12.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 144

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## நிறைவேற்று ஜனாதிபதி முறையில் மாற்றம் எதுவும் செய்ய வேண்டாம்

### ஜனாதிபதிக்கு பிரதம நீதியரசர் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறையில் மாற்றம் செய்ய வேண்டாம் என்று மகிந்தவுக்கு பிரதம நீதியரசர் சரத் என் டி சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

மகிந்தவின் அலரி மாளிகையில் கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பின் போது இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, விஸ்வ வர்ணபால, நிமால் சிறிபால டி சில்வா மற்றும் மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் ஆலோசனையின் போது உடனிருந்தனர்.

தேர்தல் அமைப்பு முறையில் மாற்றம் தொடர்பாக விவா (04 ஆம் பக்கம் பார்க்க)

## மிலேனியம் கணக்கு நிதியை அமெரிக்கா இடைநிறுத்தியது

(கொழும்பு)

இலங்கைக்கான மிலேனியம் சலஞ் கணக்கு நிதியை இடைநிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இலங்கைக்கான 3 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமெரிக்க தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை வெளியுறவுச் செயலர் றிச்சட் பௌச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிகழும் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் காரணமாக இந் நிதியுதவியை வழங்கமுடியாதுள்ளதால் இதனை இடைநிறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் விமான சேவை இடைநிறுத்தமும் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் குறைவும் வெளிநாட்டு உதவிகள் இடைநிறுத்தப்படுவதும் நாட்டின் வளர்ச்சிக்குப் பாதிப்பு எனத் தெரிவித்தார்.

வான் புலிகளின் தாக்குதலை தமது அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது எனத் தெரிவித்த பௌச்சர், (04 ஆம் பக்கம் பார்க்க)

# வில்பத்து வனப் பகுதியில் புலிகளின் விமானத் தளம்?

### த ஐலன்ட் செய்தி வெளியீடு

(கொழும்பு)

வில்பத்து வனப் பகுதியில் விடுதலைப்புலிகளின் வானூர்தித் தளம் இருக்கக் கூடும் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது. கொழும்பிலிருந்து வெளியாகும் த ஐலன்ட் நாளிதழில் இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இத்தகவலை இராணுவப் புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் விமானங்களைத் தாக்க மிக்-29 விமானம் வாடகைக்குக் கொள்வனவு

(கொழும்பு)

புலிகளின் விமானத் தாக்குதலால் இலங்கையில் உருவாகியிருக்கும் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்காக மிக்-29 ரக வானூர்தி ஒன்றை விமானப் படை அவசரமாக வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரேனிலிருந்து அதி நவீன மிக்-29 செய்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்ற போதிலும் அவற்றைப் பெற்றுக் கொள்வதில் காலதாமதம் ஏற்படும் என்பதால்தான் அவசரமாக வாடகைக்கு மிக்-29 ரக வானூர்தி ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியில் அரசாங்கம் இப்போது இறங்கியிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## ரணில் நேற்று சீனா பயணம்

(கொழும்பு)

சீனாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை பயணமாகியுள்ளார்.

சீன தேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்புக்கு இணங்கவே அவர் அங்கு பயணமாகியுள்ளார். பீஜிங்கில் நடைபெறும் விசேட கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டிலும் விக்கிரமசிங்க கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ் விஜயத்தின் போது கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நாயகத்தின் சீன வெளிவிவகார அமைச்சரையும் அவர் சந்தித்து உரையாடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சீன விஜயத்தின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க திபெத்துக்கும் விஜயம் செய்யவுள் —

விக்கப்படுகின்றது.

உக்ரேனிலிருந்து அதி நவீன மிக்-29 ரக விமானங்கள் சிலவற்றைக் கொள்வனவு

சாங்கம் இப்போது இறங்கியிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மிக்-29 ரக (04 ஆம் பக்கம் பார்க்க)

ணமாகியுள்ளார். பீஜிங்கில் நடைபெறும் விசேட கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்

பட்டுள்ளன.

சீன விஜயத்தின் பின்னர் ரணில் விக்கி ரமசிங்க தீபெத்துக்கும் விஜயம் செய்யவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## புதிதாக இரு அமைச்சர்கள் பதவிப் பிரமாணம்

ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.நிஜாமுதீன் ஆகியோர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அமைச்சர் களாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சராக சுசந்த புஞ்சிநிலமேயும் ரயில்வே பிரதியமைச் சராக எஸ்.நிஜாமுதீனும் தமது அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்றனர். (ச-5)

## இலங்கைக்கு நவீன ரக ராடர்களை வழங்க இந்தியா தீவிர பரிசீலனை

(புதுடில்லி)

இலங்கைக்கு நவீன ரக ராடர் கருவிகளை வழங்குவது தொடர்பாகவும் ஏற்கனவே வழங்கப்பட்ட ராடர் கருவிகளை பரிசீலிப்ப தற்கு நிபுணர்களை அனுப்புவது தொடர்பாக வும் இந்தியா தீவிரமாக பரிசீலித்து வருவ தாக 'த ரெலிக்கிறாப்' பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது.

இது தொடர்பாக 'த ரெலிக்கிறாப்' வெளி யிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் முப்படைத் தளபதிகள், புல னாய்வுத்துறை அதிகாரிகள், பாதுகாப்பு ஆலோசகர்கள் கலந்து கொண்ட உயர் மட் டக் கூட்டத்தி (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.அகதி முகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள மஞ்சத் தொடுவாய் சாரதா வித்தியாலய அகதிமுகாம் மீது நேற்று முன்தினம் இரவு 10.45 மணியள வில் நடாத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 8 பேர் தொடர்ந் தும் மட்டக்களப்புப் போதனா வைத்திய சாலையில்.சிகிச்சை (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க சர்வதேச குழுவை அமைக்க வேண்டுகோள்

### நியூயோர்க் மனித உரிமை அமைப்புக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்தும் நூற்றுக் கணக்கானோர் அடையாளம் தெரியாத துப் பாக்கிதாரிகளினால் கொல்லப்பட்டு வருவது குறித்து நியூயோர்கைத் தளமாகக் கொண் டுள்ள கியூமன் ரைஸ் வோர்ச் என்னும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு கவ லை வெளியிட்டுள்ளது.

இக் கொலைகளை விசாரித்து குற்றவாளி களைச் சட்டத்தின் முன்பு நிறுத்துவதற்கு ஏற்ற முறையில் சுதந்திரமான வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் விசாரணைகள் அவசியமென அவ் அமைப்பு தெரிவித்துள் ளது.

இவ் விசாரணைகள் நேரடியாக ஐக்கிய நாடுகளின் பணிப்புரைக்கு அமைய செயற் பட வேண்டும் என இவ் அமைப்பின் ஆசிய பிராந்திய இயக்குநர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்க ளைக் கண்காணிக்க சர்வதேச மனித உரிமை கள் கண்காணிப்புக் குழுவை அமைப்பதற்கு இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம் கொடு க்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் அமெரிக்காவின் பிரதி வெளியுறவுச் செயலர் றிச்சட் பௌச்சர் பய ணம் மேற்கொண்ட நிலையில் இந்த வேண்டு கோள் விடுக்கப்பட்டது.

றிச்சட் பௌச்சர் தனது இலங்கைப் பய ணத்தை வியாழக்கிழமை நிறைவு செய்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அர சாங்க உயர் அதிகாரிகளை அவர் சந்தித்துப் பேசினார்.

இதனிடையே வாஷிங்டனில் ஊடகவிய லாளர்களிடம் (04 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

### தமிழ் மொழியை அரச சேவையில்

# முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்

## அரச கருமமொழிகள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச சேவையில் தமிழ்மொழியை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டில் உக்கிரமடைந்துள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது இலகுவாக இருக்கும் என்று அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவரும் சட்டத்தரணியுமான ராஜா கொல்லுரே தெரிவித்தார்.

நாட்டில் இனப்பிரச்சினை ஏற்படுவதற்கு மொழியே அடிப்படையாக அமைந்தது. எனவே அரசகரும மொழிகளின் பயன்பாட்டை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அரசகரும மொழிகள் கொள்கையை செயற்படுத்தும் பொருட்டு அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் 2006 ஆம் ஆண்டுக்கான பரிந்துரை நிருபம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறுகையில், இலங்கையில் மொழிப்பிரச்சினை காலம் காலமாக இருந்து வருகிறது.

இப் பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.2000 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி அரசதுறையில் 186 பேர் மட்டுமே மொழிபெயர்ப்பு செய்யக்கூடியவர்களாக உள்ளனர். இவர்களைக் கொண்டு முழுமையான சிறந்த அரச சேவை வழங்க முடியாது.

தமிழிலிருந்து சிங்களத்திற்கு மொழி பெயர்ப்பு செய்யக் கூடியவர்கள் 48 பேரும் சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்பு செய்யக்கூடியவர்கள் 108 பேரும் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்புச் செய்யக்கூடியவர்கள் 14 பேரும் உள்ளனர்.

இதன் மூலம் அரச சேவையின் நிலை குறித்து எம்மால் ஊகிக்க முடிகிறது. சிங்கள மொழிப் பயன்பாட்டின் வெற்றியால் மட்டும் சிறந்த அரச சேவையை மக்களுக்கு வழங்க முடியாது. தமிழ் பேசும் மக்களில் 61 சதவீதமானோர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழுகின்றனர். இம் மக்கள் அரச சேவையைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தமக்குக் கிடைக்கும் நியமனங்கள் கூட சிங்கள மொழியில் வழங்கப்படுவதாக தமிழ்ப்பேசும் மக்கள் முறையிடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் தாம் பல்வேறு அசௌரியங்களை எதிர்நோக்குவதாவும் இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே அரச கருமமொழிகளான தமிழையும் சிங்களத்தையும் அரச சேவையில் சம அளவில் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மொழி பெயர்ப்பாளர்களை உருவாக்குவதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அதற்காக அரச கரும மொழிகள் ஆணைக்குழுவினால் ஜனாதிபதியிடம் பரிந்துரை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைப் பத்திரங்களை தமிழ் மொழியில் வெளியிட முடியாத நிலையில் அரச சேவை இன்றுள்ளது. இது கவலைக்குரிய விடயம்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளைத் தெரிந்தவர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.நீதிமன்றத் தீர்ப்புக்கள் கூட தமிழ் மொழியில் வெளியிடப்படுவதில்லை. நாடாளுமன்றத்தில் தமிழ் மொழிபெயர்ப்புக்கான வளம் குறைவாகவே உள்ளது.

இதனால் தமிழ் மட்டுமே தெரிந்த மக்கள் பிரதிநிதிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

இனப்பிரச்சினையில் மொழி பெரும் பங்கு வகிக்கின்றது. எனவே தமிழ் மற்றும் சிங்கள மொழிகளின் சம அளவான பயன்பாட்டுக்கு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றே எமது பரிந்துரையில் தெரிவித்துள்ளோம் என்றார். (ச-5)

## பயிற்சிக் கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் நடாத்தும் இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை காலை 9 மணிக்கு அளவெட்டி அருணோதயா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள வளத்துணையாளர் சைவப்புலவர் நா.நவராஜ் 'உள நெருக் கீட்டிற்கான சுய முகாமைத்துவம்' என்ற விடயத்தில் கருத்துரை வழங்குவார். (ச)

## பொதுக்கூட்டம்

இலங்கை கசரோக தடுப்புச் சங்கத்தின் யாழ்.கிளையின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மார்பு நோய் சிகிச்சை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதன் தலைவர் வைத்தியகலாநிதி சி.எஸ்.யமுனானந்தா அறிவித்துள்ளார். (ச)

## வவு.மோ.போக்குவரத்துத் திணைக்களத்தில் யாழ்.வாகனங்களின் இலக்கத் தகடுகள்

வவுனியா மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள வாகனங்கள் சிலவற்றின் இலக்கத் தகடுகள் இருப்பதாக வவுனியா மோட்டார் போக்குவரத்து திணைக்கள வாகனப் பரிசோதகர் ஆர்.ஏ.ரி.குலாஸ் அறிவித்துள்ளார்.

பின்வரும் இலக்கங்களுடைய வாகனங்களின் உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம்,தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டால் அவற்றை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

NPGN-1103,1110,4182,4185,4198, 6593,6602,6638,6640,6641,6642, 9712,9713,9751,9789,9792,9794 NPHG-0597,0694,0747,0776 NPHO-3978,4113,4156 NPGU- 5783,5645, 5673,5730 NPGM- 0515,0548,0591, 0621,0622,0623 NPGJ-4666,NPHZ-2814 NPGZ- 4827 NPHH- 1509,1506

NPGP- 4430,4438,4447,4455, 4460 NPGI- 5732 NPHI- 6573,6604, 6637, 6698 NPHD- 6558,6414 NPHA-5955, 5995,6012,6013,6014, 6015, 6017,6144 NPGO- 8373,8398,8420, 8429,8433, 8461,8475,8481,8501, 8509,8510,8531, 8540

NPGQ- 0952, 0988,1034,1043, 1124,1125, 1134, 9312,9321,9330, 9337,9347,9364, 9371,9379,9382, 9395, 9410, 9417, 9429,9436,9437, 9462, 9464, 9468,9471,9483, 9485,9500 NPHT- 5016,5031 NPHK-3963,4052, 4071, 4084,4146

NPHC- 2319,3184, 3274, 3489, 3504,3548 NPHE- 7206, 7208,7220, 7281,7289,7300,7336, 7352,7364 NPGW- 5383,5417,5481, 5600 NPHW-3745 NPGS- 8928,8932, 8934,8943, 8990,9008,9015,9034, 9036,9037 NPGP- 4307,4365,4374, 4388,4472, 4473,4479,4483 NPGR- 8231,8820, 9047,9087,9093,9102, 9116,9184 (ச)

## ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர் மக்கள் பயணம் செய்ய வேண்டுமா?

### விமல் வீரவன்ச கேள்வி

(கொழும்பு)

டீசல்,பாண்,காஸ் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இந் நிலையில் அரசாங்கம் தனியார் பஸ் கட்டணங்களை ஜூலை மாதம் அதிகரிக்கவிருப்பதாக அறிவித்துள்ளது.

அப்படியாயின் மக்கள் தங்களது பயணத்தை ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டுமா என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது வாய் மூலமான கேள்விக்கு போக்குவரத்து அமைச்சர் அளித்த பதிலுக்கு குறுக்கிட்டு கேள்வி கேட்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்கூறப்பட்ட முக்கியமான பொருட்களின் விலைகள் அதிகரித்து கொண்டே செல்வதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இவ்வாறான அசௌகரியங்களுக்கு மக்கள் முகம் கொடுப்பதற்கு அரசாங்கம் இடம் கொடுக்கக் கூடாது. டீசல் விலை அதிகரிப்பினால் தனியார் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என்றும் தேசிய போக்கு வரத்து கொள்கையின் பிரகாரம் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்தே பஸ் கட்டணம் அதிகரிக்கப்படும் என்றும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அப்படியாயின் இந்நாட்டு மக்கள் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய பயணங்களை ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர் மேற் கொள்ள வேண்டுமா என்றும் கேள்வி எழுப்பினார். (ச-5)



புலோலி ப.நோ.கூ.சங்கத்தில் 37 ஆண்டுகள் பணியாற்றி இளைப்பாறிச் செல்லும் பொது முகாமையாளர் செல்வி எஸ்.சீவரத்தினத்தின் சேவை நலன் பாராட்டு விழாவில் சங்கப் பொதுமுகாமையாளர் எஸ்.வேல்முருகு பாராட்டுரை நிகழ்த்துவதையும் செல்வி சீவரத்தினம், சங்க இயக்குநர் சபை தலைவர் எஸ்.ஆறுமுகநாதன், இயக்குநர் சபை உறுப்பினர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:பரு. நிருபர்)

## சிசு உதான சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு

மக்கள் வங்கியின் சிசு உதான பாவனையாளர் திட்டத்தின் கீழ் 2006 ல் தெரிவு செய்யப்பட்ட வடமராட்சி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிசு உதான சாதனையாளர்களாக பின்வரும் மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்ச்செல்வி தங்கராசா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), அன்ரனி ஜெசிந்தா அந்தோனிப்பிள்ளை (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை), நித்தியா இராமகிருஷ்ணன் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை). (ச)

## குருபூசை தின பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசை தின பரிசளிப்பு விழா நாளை காலை 9 மணிக்கு நடைபெறும். சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத் தலைவர் சட்டத்தரணி என். தங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இப் பரிசளிப்பு விழாவில் பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் ஏ.ஏ.நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ச-52)

## சீனி 63 ரூபா

(யாழ்ப்பாணம்)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் சீனி ஒரு கிலோ 63 ரூபாவுக்கே விற்பனை செய்ய வேண்டுமென யாழ்.அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். எனினும் ஏற்கனவே எடுத்துவரப்பட்டு இது வரையும் இருப்பிலுள்ள சீனி 70 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

இவ் இருப்பிலுள்ள சீனியின் விலையை குறைத்து 66 ரூபாவிற்கு விற்பனை செய்யுமாறு அரச அதிபர் ப.நோ.கூ.சங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச-5)

## ஆட்கடத்தல்களில் ஈடுபடுபவர்கள் யார் என்று எம்மால் கூறமுடியாது

### அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்களைக் கடத்துபவர்கள் யார் என்று எங்களால் கூற முடியாது. ஆனாலும் கடந்த ஒரு மாத காலமாக காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல் குறைவடைந்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண சபையில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்;ஆட்கடத்தல், காணாமல் போதல் மற்றும் இடம் பெயர்வுகள் தொடர்பாக நாங்கள் கவலைப்படுகின்றோம்.

இருந்தாலும் ஆட்கடத்தல் கடந்த மாதம் குறைவடைந்துள்ளது. அரசாங்கம் மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஆட்களை யார் கடத்துகின்றனர் என்று எங்களால் கூறமுடியாது. ஐக்கிய தேசியக்கட்சியிடம் வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன்.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவின் கூட்டத்திற்கு சமுகமளிக்க வேண்டும். உங்கள் யோசனைகளையும் சமர்ப்பியுங்கள். சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐ.தே.கவும் இணங்கினால் தீர்வு யோசனைகளை நடைமுறைப்படுத்த முடியும்.

அதன் மூலம் தமிழ் மக்களும் எங்களில் நம்பிக்கை வைப்பார்கள். அப்போதுதான் விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்த முடியும். அதற்காகத் தான் சர்வகட்சி ஆலோசனைக்குழுவை கூட்டி ஆராய்ந்து வருகின்றோம் என்றார். (ச)

கட்டுப்பாடான சரியான வழியில் நம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும். இல்லையென்றால் நேர்மாறான விளைவுதான் உண்டாகும். —பிளேட்டோ

வலம்புரி

# ஒழுங்கான மின் விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும்

யாழ்.குடாநாட்டில் சில காலத்திற்கு சீராகவும், ஒழுங்காகவும் இருந்த மின் விநியோகம் தற்போது சீரற்றதாக மாறிவருகின்றது.

மின்வெட்டைக் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலைக்கு யாழ்.மின்சார சபை தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதிலும், மின் வெட்டுக்கான காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

அளவுக்கு அதிகமான மின் பாவனையினால் மணித்தியாலக் கணக்கில் மின்சாரம் வெட்டப்படுவதை அனுபவத்தில் நாம் கண்டுள்ளதால், யாழ். குடாநாட்டில் மின்விநியோகத்தைசீர்படுத்துவதற்கு மின்சார சபையினதும், பாவனையாளர்களினதும் ஒத்துழைப்புத் தேவையாக இருக்கின்றது.

பாவனையாளர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதனூடாக மின் விநியோகத்தை சீர் படுத்துவதற்கு உதவ முடியும்.

அதே நேரம் மின்சார சபையும் யாழ்.குடாநாட்டின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மின் வெட்டைத் தவிர்த்து முழுமையாக மின்சாரத்தை வழங்க முன்வரவேண்டும்.

குறிப்பாக யாழ்.குடாநாட்டின் தற்போதைய இக் கட்டான சூழ்நிலையால் மாணவர்களின் கல்வி பாதிப்படையும் வாய்ப்புக்கள் உண்டு.

இதற்கு மேலாக நடந்து முடிந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியும் மாணவர்களின் கல்வியை மாதக் கணக்கில் பாழடித்து விட்டது.

உலகக்கிண்ணம் முடிந்து இனிமேலாவது மாணவர்கள் கல்வியை தொடர்வார்கள் என்ற நம்பிக்கையின் மிதப்பில் மணித்தியாலக் கணக்கில் இடம் பெறும் மின் வெட்டு மேலேழுந்த நம்பிக்கையை தாழ வைத்துவிட்டது.

யாழ்.குடாநாட்டு மாணவர்களின் ஒரே செல்வமாக இருக்கக்கூடிய கல்விக்காக அனைவரும் பாடுபடவேண்டிய நேரத்தில், யாழ்ப்பாண மின்சார சபையின் பங்கும் பணியும் காத்திரமானது என்பது மறுக்கமுடியாத உண்மை.

இது விடயத்தில் யாழ்ப்பாண மின்சார சபை தனது சேவையை மேலும் ஒரு படி திறம்பட ஆற்ற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

மின்சார தடை பற்றி விசேட அறிவித்தலை சுயலாபமும் சுயவிருப்பும் கருதியவாறு ஊடகத்தில் விளம்பரம் செய்து விட்டு திடீர் திடீரென மின்வெட்டை அமுல்படுத்துவது சிறந்த நிர்வாகத்திற்கு அழகல்ல.

உண்மையில் மின்தடை பற்றிய அறிவித்தல் என்பதற்குள் ஒழுங்கான-சீரான மின் விநியோகத்தில் இடம் பெறக்கூடிய மின் வெட்டுப்பற்றிய தகவலை மக்களுக்கு வழங்குவதே முதலிடத்தை பிடித்துக் கொள்ளும். ஏனையவை துணைக் காரணங்களாக அமையும்.

இந் நிலையில் அடிக்கடி மின் வெட்டை அமுல் படுத்தி விட்டு மின்தடை பற்றிய அறிவித்தலை வெளியிடுவது அர்த்தமற்றதாகும்.

எதுவாயினும் யாழ்.குடாநாட்டில் ஒழுங்கான மின் விநியோகத்தை வழங்குவதில் மின்சார சபை முனைப்புடன் சேவையாற்ற வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாகும்.

# சி.சு.கவின் தீர்வு யோசனையை திருத்தம் செய்ய இணக்கம்!

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக நாங்கள் முன்வைத்த திருத்தங்கள் சுதந்திரக் கட்சியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனவே தற்போதைக்கு அரசாங்கத்திலிருந்து விலகுவது போன்ற பாரதூரமான முடிபுகளை ஜாதிக ஹெல உறுமய எடுக்காது.

இருப்பினும் பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பான அரசாங்கத்தின் நகர்வுகள் குறித்து அவதானமாக இருப்போம் என்று ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இனப்பிரச்சினை தீர்வு யோசனை தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய எடுத்துள்ள முடிபு குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது, சிறிலங்கா சுதந்திரக்கட்சி இனப்பிரச்சினை தீர்வுதொடர்பாக முன்வைத்துள்ள யோசனை தொடர்பாக எமது கட்சி அதிருப்பதியிலிருந்தது. காரணம் இந்தயோசனை இரண்டு பிரதான விடயங்களில் மகிந்த சிந்தனைகொள்கைத் திட்டத்தை மீறியுள்ளது.

அதாவது; ஒற்றையாட்சி என்ற பதம் யோசனையில் இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன் பௌத்த மதத்திற்கு உரிய இடம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனையடுத்து எமது கட்சியின் பிரதிநிதிகள் இவ் விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது மேற்கண்ட இரண்டு திருத்தங்களையும் யோசனையில் உள்ளடக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார். அதனை நாங்களும் ஏற்றுக்கொண்டோம். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யோசனைகள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் கையளிக்கப்படும்போது நாம் முன்வைத்துள்ள திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று கருதுகின்றோம்.

இந் நிலையில் எமது திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமையினால் நாங்கள் அரசாங்கத்துக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளோம். தற்போதைக்கு அரசாங்கத்திலிருந்து விலகுவது போன்ற பாரதூரமான முடிபுகளை எடுக்கமாட்டோம்.

ஆனால் அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழிக்கும் செயற்பாட்டில் சிறப்பாக செல்படுகிறதா? என்பதில் நாங்கள் மிகவும் அவதானமாக இருப்போம். அந்தப் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகினால் எமது கட்சியும் சில தீர்க்கமான முடிபுகளை எடுக்கும். (ச-5)

# உப தபாலதிபர் போட்டிப் பரீட்சையால் பதில் உப தபாலதிபர்கள் பாதிப்பு

(மன்னார்)

பதில் உபதபால் அதிபர்கள் கடமையாற் றும் உப தபால் அலுவலகங்களுக்கு நிரந்தர உப தபால் அதிபர்களை போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்ய அரசு மேற்கொண் டுள்ள நடவடிக்கையால் நீண்டகாலமாக பதில் உப தபால் அதிபர்களாக கடமையாற்றுபவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறு அகில இலங்கை தமிழ் பேசும் உப தபால் அதிபர்கள் தொழிற்சங்கத் தலை வர் ஏ.ஜோர்ச்பிள்ளை தெரிவித்தார். இவ் விடயம் தொடர்பாக தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு அவர் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் தெரிவித்ததாவது; வடக்குக் கிழக்கு உட்பட நாடு முழுவதும் சுமார் 927 பேர் பதில் உப தபாலதிபர்களாக உப தபாலகங்களில் கடமையாற்றி வருகின்றனர். உப தபாலதிபர் ஒருவர் ஓய்வு பெற் றால் அவருக்குப் பதிலாக பதிவு செய்யப் பட்ட பதில் உப தபாலதிபர்கள் கடமை புரிகின்றனர். அவர்களையே நிரந்தரமாக்க வேண்டும். அதை விடுத்து போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் வழங்க எடுத்திருக்கும் முடிபு நீண்ட காலமாக பதில் உப தபாலதிபர்களாக கடமையாற்றுபவர்களை நிர்க்கதிக்கு ஆளாக்கும் செயலாகும்.

ஏற்கனவே அரச சேவையில் 180 நாட் கள் தொடர்ச்சியாக கடமையாற்றி வரும் சமயாசமய, தற்காலிக ஊழியர்கள் நிரந்தர மாக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# மாவட்ட கலாசாரப் பேரவையின் தேசிய கலை இலக்கிய விழா இன்று

## வெற்றி பெற்றோரின் விபரம் வெளியானது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவை நடாத்தும் தேசிய கலை இலக்கிய விழா இன்று காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் 2006 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்று சான்றிதழ்கள், பரிசில்கள் பெறுவோரின் விபரங்கள் பிரதேசசெயலகம், உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்பன வெளியிடப்பட்டுள்ளன.

**கட்டுரைப்போட்டி (சிரேஷ்ட பிரிவு)**

சித்திராங்கி செல்வச்சோதி (கரவெட்டி), பாலசாயினி மயில்வாகனம் (யாழ்ப்பாணம்), பாகினி சிவசுவாமி (பருத்தித்துறை), செல்வகுமாரி ஞானசோதி

**கட்டுரைப்போட்டி -கனிஷ்டபிரிவு**

ஆர்த்திகா செல்வவிநாயகம் (பருத்தித்துறை), அனுஷியா அற்புதராசா (பருத்தித்துறை), துர்க்கா ஜெயரட்ணம் (கரவெட்டி), ப.நிஜந்தா (சங்கானை)

**சிறுகதைப்போட்டி -மட்டுப்படுத்தப்பட்டது**

கபிலா சௌந்தர்ராஜா (யாழ்ப்பாணம்), வல்லிபுரம் ரமணன் (கரவெட்டி), மேரி பௌசிகா வில்லியம் அன்ரன் (பருத்தித்துறை)

**சிறுகதைப்போட்டி-திறந்தபிரிவு**

வி.ஜெயபால் (யாழ்ப்பாணம்), திருமதி தே.பஞ்சாட்சரம் (சாவகச்சேரி), புலோலியூர் செ.கந்தசாமி (பருத்தித்துறை), இராசையா பஞ்சலிங்கம் (ஆங்கிலம்) (பருத்தித்துறை)

**சிறுகதை விமர்சனம் -உயர்தர வகுப்பு மாணவர்கள்**

உருத்திரமூர்த்தி சுகாஜனன் (தெல்லிப்பழை (ஊர்கா), கி.யசோதினி (காரைநகர்), தவராஜா பிரியலதா (சண்டிலிப்பாய்), மேனகா தவேந்திரன் (சண்டிலிப்பாய்)

**கவிதைப்போட்டி (மட்டுப்படுத்தப்பட்டது)**

அபிராமி நல்லதம்பி (பருத்தித்துறை), உஷா அன்ரன் யோசப் வெஸ்ரின் (பருத்தித்துறை), தமிழினி அமிர்தலிங்கம் (வேலணை), சங்கீதா தவராசா (நல்லூர்)

**கவிதைப்போட்டி -திறந்தபிரிவு**

செல்வி ஸ்ரீபுராதனி ராஜகோபாலன் (தெல்லிப்பழை), இராஜப்பு திருத்துவராஜா (பருத்தித்துறை), செல்வி தி.உதயலதா (சாவகச்சேரி), இராசையா பஞ்சலிங்கம் (ஆங்கிலம்) (பருத்தித்துறை)

**கவிதை விமர்சனப்போட்டி (உயர்தர வகுப்பு மாணவர்கள்)**

மீரா ரவீந்திரகுமார் (சண்டிலிப்பாய்), இரத்தினசிங்கம் தயாளினி (ஊர்காவற்றுறை), செல்வி து.உதயகௌரி (சங்கானை)

**காவியம் -மட்டுப்படுத்தப்பட்டது**

செல்வி மேரிதர்சிகா மரியசீலன் (பருத்தித்துறை), ம.அமலஜஸ்ரின் (ஊர்காவற்றுறை), செல்வி குணரத்தினம் குணராஜா (கோப் பாய்)

**காவியம்-திறந்தபிரிவு**

நடராஜா புகன்சிறீந்திரன் (சாவகச்சேரி), பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் (கரவெட்டி), திருமதி உஷாதேவி செல்வச்சோதி (கரவெட்டி), செல்வன் ப.வரதன் (ஆங்கிலம்) (பருத்தித்துறை)

**எழுந்தமான கவிதைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள்**

த.கிருபாகரன் (கரவெட்டி), பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் (கரவெட்டி), பத்தினிப்பிள்ளை முத்துவேலு (கரவெட்டி), செல்வி உதயலதா தில்லையம்பலம் (சாவகச்சேரி), திருமதி கஜந்தினி வரதலோஜன் (ஊர்காவற்றுறை)

**சிறுவர்களுக்கான ஓவியப்போட்டியில் சான்றிதழ்கள் பெறுபவர்களின் பெயர் விபரம்-2006**

**ஆரம்பப்பிரிவு**; எஸ்.கஜேந்த், கே.கோமாஸ்ராஜ், ஆர்.நிகேஸ், எம்.லிந்துசா, எஸ்.சசிகலா, ரி.தேவானந்த், கே.கௌசல்யா, **2ஆம் நிலை ஆரம்பப்பிரிவு**; ஆர்.தார்மீகன், வை.துசிகன், எஸ். கஜேந்தினி, ரீகௌரிராசா அபிலாஸ், யு.தேனுகா, வி.மதுஷா, ஆர்.மதுசாஜி, வை.விதுசன், ரி.கெனற்பிறின்ஸ், விஜயகுமார் தனுஜன், **கனிஷ்டபிரிவு**; ஏ.கொன்சியஸ், ஜெயகண்ணன், எஸ். சர்மிளா , எஸ்.சிவசங்கர், விநாசித்தம்பி மதுசன், கே.பிரியந்தா, வரதராசா வாகீசன், விந்துஷா புவனேஸ்வரசர்மா, எஸ்.திலக்சன், ரவிச்சந்திரன் சந்திரகாந்த், சரண்யா சுதாகரன், எம்.கீர்த்தனா, ரி.அமலன், சஜானா நடராஜா, ஏ.அகல்யா, எம்.லக்சன், பி.அகிலேஸ்வரன், ஏ.மெரீனா, மதுகுலன், **சிரேஷ்டபிரிவு**; என்.சவ்னா, எஸ்.கோபாலகிருஸ்ணன், ஆர்.மோகனரஞ்சினி, கே.சஹானா, எஸ்.சங்கீதா, பி.மிர்ஜவாத், கெசிகா வர்ணகுலசிங்கம், டர்சா சுஜிந்தன், சி.பிரதீபா, என்.நர்மினா, ஏ.பகீரதன், பி.பிருந்தா, எஸ்.நிசாந்தன், ரி.தக்சனா, வி.அஜந்தினி, என்.வரகஸ்மன், ஈ.அசோக், பி.சஜந்தன், ஏ.சங்கீதா, எம்.கலாரஞ்சினி, எஸ்.பவீத்திரன், எஸ்.நிசாந்தி, ஜே.நிரஞ்சன், கோபாலகிருஸ்ணன் நிரோசன், பி.கௌதமன், ரி.துசாந், எஸ்.அக்சனா

• **2 ஆம் நிலை சிரேஷ்ட பிரிவு**; ஆர்.சிவச்செல்வன், ரவீந்திரன் சுரேஷ், எஸ்.சோபிகா, சுப்பிரமணியம் சர்மிலன், கே.டி.நிருஜன், துரைசிங்கம் சித்தன், எஸ்.கம்சிதா, நாகேஸ் பிரசாந்தா, ரஜிந்தன், என்.ஐஸ்வர்யா, கதிரவேலு சிறிராம், ராதாராஜா ரஜீவ், எம்.ரவிவர்மன், கிருபானந்தன் நிசாந்தன், எஸ்.ரஜீவன், என்.தக்சாமினி, மகாலிங்கம் சாய்கரன், எஸ்.திவ்யா, எஸ்.சிவசெந்தூரி, சிவநாதன் கார்த்திகேயன், சௌந்திரராஜன் வருணன், பி.குருபரன், எஸ்.வாகீசன், மதுராந்தி ஜெயசிங்கம், கே.கஜேந்திரன், தர்மபாலன் அனோஜித், கதிரவேலு சுஜன், ரி.சிதாகர்தன், எஸ்.சர்மிலன், ரகுநாதன் மிதுராஜி. (ச)

# சர்வதேச தலையீட்டுக்கான சூழலை அரசே ஏற்படுத்திக் கொண்டுள்ளது

## ஐக்கிய தேசியக் கட்சி சாடல்

நாட்டில் சர்வதேசத் தலையீடு இடம்பெறுவதற்காக சூழ்நிலையை அரசாங்கமே உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. பாரியளவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றமையினாலேயே சர்வதேச சமூகம் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றது.

நாடு பாதுகாப்பற்ற நிலைமையில் உள்ளது என்பதனை அரசாங்கம் சர்வதேசத்திற்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க சர்வதேச சமூகத்தின் ஆதரவை நாட்டிற்குப் பெற்றுக் கொள்வதற்காகவே சர்வதேச மட்டத்தில் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றார். காரணம் அரசாங்கம் சர்வதேசத்தின் ஆதரவினை இழந்துவிட்டது.

பயங்கரவாத அமைப்புக்கு அரசாங்கம் நிதியை வழங்கிவிட்டு சர்வதேச மட்டத்தில் புலிகளின் நிதிசேகரிப்பைத் தடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுப்பது வேடிக்கையாகும் என்று அவர் கூறினார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேசத்தின் ஆதரவை அரசாங்கம் முழுமையாக இழந்துவிட்டது.எமது ஆட்சிக் காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து விலக முடியாதளவிற்கு புலிகளுக்கு சர்வதேச மட்டத்தில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன்பாக பிரிட்டன் புலிகளைத் தடை செய்தது. ஆனால் இன்று புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக பிரிட்டன் பாராளுமன்றத்தில் பேசப்படுகின்றது.இதற்கு இந்த அரசாங்கத்தின் அசமந்தப்போக்கே காரணமாகும்.

கடந்த 9மாதத்தில் இரண்டு எம்.பிக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். 4 ஆயிரத்து 500ற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். 150 ற்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டுள்ளனர்.எதிர்க் கட்சி எம்.பிமார் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

ஜே.வி.பி.தற்போது பிரிட்டன் விவகாரத்தைப் பிடித்துக் கொண்டு ஆடுகின்றது. மக்கள் பசியுடன் இருக்கும் போது ஜே.வி.பி. தமது கடமையை மறந்து செயற்படுகின்றது. கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் கதவில் சுவரொட்டிகளை ஒட்டிய ஜே.வி.பியினர், ஏன் அருகிலுள்ள அலரிமாளிகையின் மதிலில் சுவரொட்டிகளை ஒட்டவில்லை என்று கேள்வி எழுப்புகின்றோம்.

காரணம் அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரிடம் இலங்கை சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கும்படி கேட்டிருந்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இளையதம்பி தயன் (வயது-37) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்பிலுள்ள தனது வீட்டிலிருந்த போது நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் அடையாளம் தெரியாத குழுவினரால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## இந்திய உயர்ஸ்தானிகராலய வாகனம் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடந்த மாதம் சீதுவையில் கடத்தப்பட்ட இந்திய உயர்ஸ்தானிகர் ஆலயத்திற்கு சொந்தமான வாகனத்தை குருநாகலில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். டொயோடா வகையைச் சேர்ந்த இந்த வான் சாரதியுடன் கடத்தப்பட்டிருந்தது.

பின்பு சாரதி விடுவிக்கப்பட்டார். கடத்திச் செல்லப்பட்ட வான் முதலில் நீர்கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பின்னர் அங்கிருந்து குருநாகலுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு இலக்கத் தகடு மாற்றப்பட்டு விற்பனைக்குத் தயாராகவிருந்த நிலையிலேயே வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் இதனோடு தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் நால்வரையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாகவும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினரால் இவர்கள் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மனித உரிமை...

கடந்த புதன்கிழமை பேசிய அமெரிக்க அரசாங்கப் பேச்சாளர், இலங்கைக்கான சிறப்புச் செய்தி எதனையும் றிச்சட் பௌச்சர் கொண்டு சென்றாரா எனத் தம்மால் கூற இயலாது என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் மீண்டும் பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும் என்பதுதான் அமெரிக்க புஷ் அரசாங்கத்தின் விருப்பமாகும் என்றார் அவர். (ச-5)

## வாழைச் செய்கைக்கான வேலைப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் வாழைப் பயிர்ச் செய்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தேவைகளையும் ஆய்வு செய்து அப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய தந்திரோபாயங்களையும் அபிவிருத்தித் திட்டங்களையும் அடையாளம் காண்பதுடன் அதற்குரிய செயற்திட்டங்களை உருவாக்கும் நோக்குடனும் விவசாயத் திணைக்களத்தினால் வேலைப் பட்டறை இன்று யாழ்.மாவட்ட விவசாயப்பயிற்சிநிலையத்தில் நடாத்தப்படவுள்ளது.

வேலைப் பட்டறையின் ஆரம்ப வைபவத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஷ் கலந்து கொண்டு தேவையான வழிகாட்டல்களை வழங்கவுள்ளதாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் அறிவித்துள்ளார். இவ் வேலைப்பட்டறையில் வாழை அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய அலுவலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## பிரித்தானியாவின் தலையீடு குறித்து இலங்கைத் தூதரகத்தில் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கை விடயங்களில் பிரித்தானியா தலையிடுவது தொடர்பாக லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நேற்று ஆலோசனை நடாத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற விவாதத்தினால் கலக்கம் அடைந்துள்ள அரசு, பிரித்தானியாவிலுள்ள சிங்கள மற்றும் தேச விரோத தமிழ் சக்திகள் மூலம் பிரித்தானிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இதன் ஒருகட்டமாக பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடாத்துவதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

இது பற்றியும் நேற்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை லண்டனுக்கு அழைத்துப் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் உரையாற்ற அழைப்பு விடுவது பற்றி பிரித்தானிய நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்ட ஆலோசனை குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## யோகாசனப் பயிற்சி வகுப்பு

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் புதிய யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் இன்று காலை 6.15 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடி விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதன் செயலாளர் எஸ்.சோதிமூர்த்தி அறிவித்துள்ளார்.

ஆண்கள், பெண்கள் என இருபாலாருக்கும் நடாத்தப்படும் இவ் யோகாசனப் பயிற்சி வகுப்பில் இணைந்து கொள்ள விரும்புவோர் மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (ச-3)

## மனித...

ராஜ் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஏற்கனவே இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை உள்ளூரில் ஈடுபடுத்துவதற்கு மறுப்பை வெளிப்படுத்தியுள்ளது.

அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே மற்றும் யப்பான் போன்ற நாடுகள் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை இலங்கையில் பணிக்கு அமர்த்துவதற்கான நடவடிக்கையை உறுதியாக எடுக்க வேண்டும் என இவ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ச-3)

## மட்டு...

பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் மீது அடையாளம் தெரியாதவர்களினால் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

மூதூர் பகுதியை சேர்ந்த இவர்கள் வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்த நிலையில் இப் பாடசாலை நலன்புரி நிலையத்தில் வசித்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-3)

## இலங்கைக்கு நவீன ரக...

லேயே இவ்விடயம் ஆராயப்பட்டது.

இந்தியா முன்னதாக 'இந்திரா 2டி' ரக ராடர்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது. இந்நிலையில் புலிகளின் வான் தாக்குதல் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில்

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டு பாரத் எலக்ரோனிக் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டவையாகும்.

மேலும் இலங்கைக்கு வழங்கப்படும்

## விடுதலைப்புலிகளின் விமான...

விமானங்களைச் செலுத்து வதில் விமானப்

வித்துள்ளன.

இந்தியா முன்னதாக 'இந்திரா 2டி' ரக ராடர்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது. இந்நிலையில் புலிகளின் வான் தாக்குதல் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் தமக்கு 'இந்திரா 3 டி' ரக ராடர் கருவிகளைத் தருமாறு இலங்கைப் பாதுகாப்புத்துறை இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

மேலும் முன்னர் வழங்கப்பட்ட ராடர்களின் செயற்படுநிலை, வினைத்திறன் தொடர்பாக ஆராய உயர்மட்டக் குழுவை அனுப்புமாறு இலங்கை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த இரண்டு ரக ராடர்களும் இந்தியப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டு பாரத் எலக்ரோனிக் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டவையாகும்.

மேலும் இலங்கைக்கு வழங்கப்படும் ராடர் கருவிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக இலங்கை விமானப் படைக்கு இந்தியா பயிற்சி அளித்து வருகின்றது. மேற்படி விடயங்களைப் பாதுகாப்பு அதிகாரிகள் இக் கூட்டத்தில் முன்வைத்துள்ளனர்.

எனினும் இவ் விடயங்கள் தொடர்பாக எவ்வித இறுதி முடிபும் எடுக்கப்படவில்லை எனப் பாதுகாப்புத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

கொண்டுள்ளார். (ச-3)

பிடத்தக்கது. (ச-3)

## விடுதலைப்புலிகளின் விமான...

விமானங்களைச் செலுத்து வதில் விமானப் படையினருக்கு அனுபவம் இல்லாமையால் உக்ரேனிலிருந்து விமானிகளைக் கொண்டு வருவதற்கான முயற்சிக ளிலும் விமானப் படை இறங்கியிருக்கின்றது.

இது தொடர்பாக அரசாங்கம் உக்ரேனுடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்கனவே செய்திருப்பதாகவும் இதன்படி வாடகைக்குப் பெறப்படும் முதலாவது விமானம் அடுத்த ஒரு சில நாள்களில் கொண்டு வரப்படும் எனவும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிந்திய அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மிக்-29 ரக விமானங்கள்தான் உலகிலேயே சிறப்பான யுத்த வானூர்திகளாகக் கருதப்படுகின்றது.

ராடரின் உதவியுடன் வானில் பறந்து வரும் எதிரி விமானங்களை தாக்கி அழிப்பதற்கான தொழில்நுட்ப வசதிகளையும் இந்த விமானம் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

வான் புலிகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு இது சிறந்த ஆயுதமாக இருக்கும் என பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் கருதுகின்றன. (எ-1)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு பரமேஸ்வரன் (நயினாதீவு)

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பரமேஸ்வரன் (தென்னை பயிர்ச் செய்கை நிலையம், கிளிநொச்சி) 11.05.2007இல் காலமானார்.

அன்னார் மார்க்கண்டு-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் இராசையா-பார்வதி, நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகபூரணி, துஸானி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரி, நகுலன், விஜி, காலஞ்சென்ற கலா ஆகியோரின் சகோதரனும் மகேந்திரன், காந்தி, ரவி, ராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 696, இராமநாதபுரம், கிளிநொச்சியில் நடைபெறும்.

பூமணி அகம்,
7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்,
சி.பெ.வீரவாகு(சிறிய தந்தை)
சி.பெ.இராசரத்தினம் (சிறிய தந்தை)

(C-048)

## வில்பத்து வனப் பகுதி...

வில்பத்துவில் உள்ள தேசிய பூங்காப் பகுதிக்குள் தமிழீழ விடுதலைப்புலிகளின் இலகு வகை வானூர்தி தரையிறங்கியதாக இராணுவப் புலனாய்வுத் துறையினர் தகவல் சேகரித்துள்ளனர்.

மிலெவில்ல, பெரியவில்லு மற்றும் பெரியகட்டை அணைகள் உள்ள பகுதிக்கு அருகாமையில் மன்னாரை நோக்கியதாக வானூர்தித் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

வானூர்தித் தளத்தை அண்மித்த பகுதிகளில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர். கடந்த ஆண்டு மே 27 ஆம் திகதி வில்பத்து தேசிய பூங்காப் பகுதியில் மிதிவெடி ஒன்றில் சிக்கி 7 உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

அதன் பின்னர் அநுராதபுரம் கஜபாகுப் படையணியின் கேணல் ஜயந்த சுமேத சுரவீர உள்ளிட்ட 8 இராணுவத்தினரும் அதே இடத்தில் மற்றொரு சம்பவத்தின் போது மிதி வெடியில் சிக்கிக் கொல்லப்பட்டனர். விடுதலைப்புலிகளின் விமான மறை விடத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள அணைகட்டுகளுக்கு அண்மித்த பகுதியில் தான் இந்த மிதிவெடிச் சம்பவங்கள் நடந்தன. இதனையடுத்தே அப் பகுதியில்தான் புலிகளின் விமானத் தளம் அமைக்கப்பட்டிருப்பதாக இராணுவப் புலனாய்வுத் துறையினர் உறுதி செய்துள்ளனர் என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## மிலேனியம்...

அதனை முறியடிக்கும் பொறுப்பு இலங்கைக்கு உண்டு எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரித்தானிய அரசாங்கமும் மூன்று மில்லியன் டொலர் பெறுமதியான பண உதவிகளை நிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நிறைவேற்று...

திக்கப்பட்டபோது, ஜனாதிபதி முறையில் மாற்றம் செய்யக் கூடாது என்று பிரதம நீதியரசர் கூறியுள்ளார்.

மகிந்தவின் தேர்தல் அறிக்கையில் தற்போதைய நிறைவேற்று ஜனாதிபதி முறை இரத்துச் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

ப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.